
C. FRANCIS
C. FRANCIS
AILLOL
AILLOL
9537 ... CORMEILLES,
CORMEILLES.

சிறுவர்

# மருதம்

19/08/1996

எண்ணம்: 8



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

KINDER LITERARISCHES MAGAZIN

## உள்ளே ........................................ பக்கம்


| | |
|---|---|
| சார்லிசப்ளின் | 4 |
| வாகனங்களின்கதை | 6 |
| புத்தியுள்ள எலி | 8 |
| சொற்களைக்கண்டுபிடியுங்கள்முடிவு | 11 |
| பொறுப்பு | 13 |
| அதிசய மோதிரம் | 15 |
| சைவப்பூனை | 16 |
| இதோ நொடிகள் | 18 |
| வேதங்கள் | 22 |
| தேசப்படம் | 23 |
| ஒன்றாய்த் தந்தான் | 25 |
| இராமாயணம் பிறந்த கதை | 26 |
| ஒளியேற்று | 29 |
| சொற்களைக் கண்டு பிடியுங்கள் | 30 |
| மகிழ்ச்சி | 31 |

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்–இங்கு
வாழும் மனிதருக் கெலாம்
பயிற்றிப் பலகல்வி தந்து– இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்–
–சுப்பிரமணியபாரதி–



அன்புச் சிறுவர் சிறுமியரே!!

கோடைக்கால விடுமுறையைச் சந்தோஷமாகக் களித்திருப்பீர்கள். உங்கள் உறவினர்கள் வீடுகளுக்குச் சென்றிருப்பீர்கள். அல்லது உறவினர்கள் உங்கள் வீட்டுக்கு வந்திருப்பார்கள். எப்படியோ விடுமுறை உல்லாசமாகக் களிந்திருக்கும். நீங்கள் சென்று வந்த இடங்களைப் பற்றி அல்லது அந்த நாட்களில் நீங்கள் கண்ட சுவையான அனுபவங்களைப் பற்றி எழுதி அனுப்பலாம் அல்லவா?

சிறுவர் அமுதத்தில் பத்து வயதிற்குட்பட்ட பாலர்களுக்கான ஆக்கங்கள் வரவேண்டுமெனச் சில பெற்றோர்களும், விமர்சகர்களும் விரும்புகிறார்கள். கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் சிறுவர் அமுதத்தின் சில இதழ்களை பாலர்களுக்கான ஆக்கங்கள் இடம் பிடித்துக் கொள்கின்றன.

ஆக்கங்கள், கோட்டுகள் எழுதும் வேளைகளில் உங்கள் பெயரைத் தமிழில் எழுதுங்கள். உங்களின் முழுப்பெயர் (தந்தையின் பெயரையும் சேர்த்து) எழுதப்படுவது நல்லது. சிலர் ஆங்கிலத்தில் முதலெழுத்தை எழுதி வருகிறீர்கள். உங்கள் முழுப் பெயரையும் தமிழில் எழுதினால் சிரமம் இருக்காது.

- ஆசிரியை -

..............................................................................................................

உங்களிடம் உள்ள பணத்தைக் காட்டிலும் உயர்வானது எது? உங்களிடமுள்ள திறமைதான். ஏனென்றால், உங்கள் திறமையை நீங்களே விரும்பினாலும் இழக்க முடியாது. மற்றவர்களால் திருட முடியாது. ஆகவே, எப்பொழுதும் உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

- எ ஹெரால்ட் கெவன் -

வெற்றி பெற்ற சாதனையாளர்கள் அனைவரும் இரண்டு விஷயங்களில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். முதலாவது தங்கள் தன்னம்பிக்கையை நம்புகிறார்கள். இரண்டாவது நேர்மையான பாதையிலேயே செல்கிறார்கள்.

- நெப்போலியன் ஹில் -

# சார்லி சாப்ளின்

பாடிய பெண்ணைப் பார்க்கும் ஆவலில் சார்லி கதவின் சாவித்துவாரத்தினால் குனிந்து பார்த்தார். எதுவுமே தெரியவில்லை. "உங்களை ஒருதரம் பார்க்க வேண்டுமே! அனுமதி கிடைக்குமா? என்று கேட்டார். அந்தப்பெண் "கதவைத் திறந்து விடுகிறேன். அதை வாய்ப்பாகக் கொண்டு உள்ளே வந்து விடாதீர்கள்" என்று கூறிக் கொண்டே கதவைத் திறந்து விட்டாள். வாசலில் நின்றவாறே சார்லி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.



சார்லி அந்த அறையில் தங்கியிருப்பது தனக்கு முன்பே தெரியும் என்று கூறிய அந்தப் பெண் அன்றிரவு அவருடன் பேசிக் கொண்டபோது தன்னைக் கண்டதாகவோ, பேசியதாகவோ யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சார்லியிடம் கேட்டுக் கொண்டாள். சார்லியும் அவளிடம் அவளது பெயரைக்கூடக் கேட்டுக் கொள்ளவில்லை. அதில் அவர் அக்கறை கொள்ளவும் இல்லை.

அவர் நினைவெல்லாம் தான் கட்டும் ஸ்ரூடியோவைச் சுற்றியே இருந்தது. 1918ல் ஸ்ரூடியோ பூர்த்தியானது. (A Dog's Life) என்ற திரைப்படம் எடுக்கப்பட்டது. கதை, திரைக்கதை, தயாரிப்பு, இயக்கம் இவற்றோடு நடிப்பையும் சார்லி ஏற்றுக் கொண்டார். அவரோடு இணைந்து பணியாற்றிய நண்பர் காலமாகி விட்டதால், ஒளிப்பதிவாளராக "மாக் ஸ்வெயின்" கடமையாற்றினார்.


அடுத்த படமாக (Shoulder Arms) சோல்டர் ஆம்ஸ் என்ற படத்தைத் தயாரித்தார். உலகப் போரை மையமாக வைத்து அந்தப் படத்தைச் சார்லி எடுத்திருந்தார். ஏனோ அந்தப் படம் சார்லிக்குப் பிடித்ததாக இருக்கவில்லை. குப்பைவாளிக்குள் போட்டு விடவும் நினைத்தார். அந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாக நண்பரான டக்லஸ் வந்திருந்தார். அவருடன் வேறு நபர்களும் வந்திருந்தார்கள். அறையில் படத்தைப் போட்டுப் பார்த்த டக்லஸ் சார்லியைக் கடிந்து கொண்டார்.

"இவ்வளவு அற்புதமான படத்தைக் குப்பைக்குள் போட இருந்தாயே! என்றார் டக்லஸ். டக்லஸ் வெறும் முகத்துதிக்காகச் சொல்லவில்லை என்பதைச் சார்லி வெகுவிரைவிலேயே உணர்ந்தார். ஆம். படம் வெற்றிவாகை சூடியது. இதேவேளையில் சார்லி திருமணம் செய்து கொள்ள விரும்பினார்.


- தொடரும் -

## வாகனங்களின் கதை

கார்களின் செயல்பாட்டை விடவும் கூடுதலான செயற்பாட்டையும், புகைவிரதவண்டியை விடவும் குறைவான செயற்பாட்டையும், கொண்டு போரூந்து என்று அழைக்கப்படும் பஸ்கள் செயல்படுகின்றன. நாற்பது பயணிகளில் இருந்து நூறு பயணிகள் வரை ஏற்றிச் செல்லும் வகைகளில் பஸ்கள் இருக்கின்றன. நகரங்களிலும், கிராமங்களிலும் மக்களுக்குச் சேவை புரிந்து வருபவை இவைகள்தான்.



தெருவுக்குத்தெரு பஸ் தரிப்பு நிலையங்களை உண்டாக்கி, புகையிரதவண்டிகள் செல்ல முடியாத கிராமங்களுக்குக்கூட பஸ்வண்டிகள் சேவை செய்கின்றன. இதனைப் போலவே பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனமாக "லோறி"கள் முக்கியத்துவம் பெறுகின்றன. வீட்டுக்கு வீடு, அங்காடிகள், கடைகள் போன்ற வியாபார நிலையங்களில் எல்லாம் லோறி முக்கியத்துவம் பெறுகின்றது.



இரண்டு மலைத்தொடர்களுக்கிடையே இரும்புக் கயிற்றினால் பிணைக்கப்பட்டு செல்லும் வாகனங்கள், இயந்திரப்படிக்கட்டுகள்-Escalator, உழவு யந்திரங்கள் என்றிவ்வாறு பலவிதமான கண்டு பிடிப்புக்கள் மனிதனின் தேவைகளைத் துரிதமாக்கச் செய்கின்றன. அடுத்த இதழில் படகு, கப்பல் போன்றவைகளின் வளர்ச்சியினை அறிந்து கொள்ளுவோம்.

-தொடரும்-

# புத்தியுள்ள எலி

ஒரு பெரிய பலசரக்குக் கடை. அங்கு பொருட்கள் வைத்துப் பாதுகாக்கும் இடத்தில், எலிகள் அட்டகாசம் செய்தன. கடைக்காரர் பொறிகள் வைத்தும் பயனில்லை. வேறு பல வழிகளில் எலியை பிடிக்க முயற்சி செய்தும் எந்த விதமான பலனும் ஏற்படவில்லை. தன் தம்பியின் வீட்டிலிருந்த பூனையை கொண்டு வந்து பொருட்கள் இருந்த அறைக்குள் கொண்டு வந்து வைத்துக் கொண்டார்.

பூனைக்கு நல்ல வேட்டை. பயமில்லாமல் திரிந்த எலிகள் பூனையின் வேட்டைக்குப் பலியாகின. பூனைக்குத் தப்பி அந்த இடத்தை விட்டு விலகஎலியொன்று எண்ணியது. மெல்லமெல்ல அரிசிமூட்டையின் பின்னால் ஒளிந்து கொண்டு வந்தது. ஆனால் தனக்குப் பின்னாலேயே பூனை வந்ததை எலி கவனிக்கவில்லை. பதுங்கி வந்த பூனை எலியைக் தன் கால்களால் பற்றிக் கொண்டது.

எலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பூனையிடமிருந்து எப்படித் தப்புவது? ஏதோ முயற்சித்துப் பார்ப்போம். கடவுளே நீதான் காப்பாற்ற வேண்டும் என்று

மனத்துள் நினைத்துக் கொண்டு பூனையைப் பார்த்து" ஐயா. உங்களைப் பார்த்தால் நல்லவர் போலத் தெரிகின்றீர். நீங்கள் யார்? என்னை ஏன் பிடித்து வைத்திருக்கிறீர்"" என்று கேட்டது. பூனை பலமாகச் சிரித்தது.

பின் எலியைப் பார்த்து, ""எலியே. என்னைத் தெரியவில்லை. கடைக்கு அப்பாவைப் பார்த்துச் செல்ல கடைக்காரரின் மகன் இங்கு வருவானே. அவன் ""பூனை எலி பிடிக்கும்"" என்று புத்தகம் படிப்பதை நீ காணவில்லையா? அந்தப் பூனை நான்தான்"" என்றது.

ஃஅப்படியா. என்று வியப்புடன் கேட்ட எலி பின்பும் கூறத் தொடங்கியது. ""ஐயா. நான் உங்களை உயர்ந்தவர் என்று அறிந்திருக்கிறேன். அடுத்த வீட்டுப்பையன் படிப்பானே பூனை மிகவும் அழகானது. பூனை மென்மையான பஞ்சு போன்றது என்றெல்லாம் படிப்பானே! அதை நினைத்து நீங்கள் மென்மையான உள்ளம் கொண்ட நல்லவர் என்று நினைத்தேன்"" என்றது.

பூனை மீண்டும் சிரித்துக் கொண்டது. பின் எலியைப் பார்த்து. ""என் உடம்பின் மென்மையான தன்மையைப் பார்த்து அப்படிச்

சொல்வார்கள். ஆனால் என் கூரிய நகங்களைப் பார்த்தாயா? இவை நான் வேட்டையாட உதவுகின்றன. வேட்டைப் பொருளாக நீ கிடைத்தாய். உன்னை உண்ணப் போகின்றேன்"" என்றது. எலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.



தன் முயற்சி வீணாகி விட்டபோதும் எலி பூனையைப் பார்த்து "பூனையாரே, பூனை கண்ணை மூடினால் உலகமே இருண்டு விடும் என்கிறார்களே! நான் இறக்கும் முன்பு அதை ஒருதரம் பார்த்து விட நினைக்கிறேன். என் ஆசையை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்" என்று பணிவுடன் கேட்டது. பூனைக்குப் பெருமை பிடிபடவில்லை. இரண்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டது. இதுதான் தருணமென்று எலி ஓடிப்போய் விட்டது.

# சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

| | | | |
|---|---|---|---|
| | குடை | அட்டை | கீ - மே |
| இ - வ | அம்பு | | கோபாலவ |
| தேசம் | அம்புலி | மே - கீ | பாலன் |
| சாறு | புலி | சுகுணன் | பாரி |
| மாரன் | | குணன் | ஆதரி |
| மற்றும் | வ - இ | கோதை | தரி |
| பாதகன் | கூனி | ஆசை | வதி |
| கன்னம் | வாதி | சரி | விதி |
| ஆவணி | மண் | பானை | திலகன் |
| பாசம் | மாரி | சமா | பாரம் |
| பதம் | பாதி | சமாதி | தன் |
| புலம்பல் | போணி | வரம் | யானை |
| புலம் | மான் | பாணி | கன்று |
| பல் | யாசகம் | சம்மதம் | ரதி |
| பாரதி | கம் | மதம் | மதி |
| ரதி | புரி | தம் | தயா |
| மத்தி | மதி | மன்னன் | பதற்றம் |
| தியானம் | யாதி | வில் | பசு |
| மத்தியானம் | பாதை | பசு | சிகரம் |
| பூனை | தாரம் | கசி | கரம் |
| விதம் | சுந்தரம் | சிம்மம் | |
| தம் | பரண் | | |

தனிச்சொற்கள்:

பா, கோ, தை, பூ, போ, மா சா, வா

எழுதியவர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | ஜெயதீபா இரத்தினசபாபதி | Eschelbronn |
| 2. | மோகன் இரத்தினசபாபதி | Eschelbronn |
| 3. | ஜெயானந்தன் கண்ணன் | Berg.Gladbach |
| 4. | சப்றீனா றோபேட் | Arnsberg |
| 5. | சுஜீனா சண்முகலிங்கம் | Clausthal |
| 6. | சுகீவன் சண்முகலிங்கம் | Clausthal |
| 7. | தர்ஷன் சரவணபவன் | Solingen |
| 8. | கௌரிசங்கர் சரவணபவன் | Solingen |
| 9. | மைதிலி மாசிலா | Saarbrücken |
| 10. | தனுஜா மாசிலா | Saarbrücken |
| 11. | சோபி யோகராஜா | Norway |
| 12. | ஜெயசாந் மனோரஞ்சிதராஜா | Münster |
| 13. | கிரிசாந் மனோரஞ்சிதராஜா | Münster |
| 14. | முகுந்தன் மகேந்திரன் | Bewg.Gladbach |

# பொறுப்பு

மாலதியின் அப்பாவின் சம்பளம் குடும்பத்திற்குப் போதுமானதாக இருக்கவில்லை. இதனால் பட்டதாரியான அம்மாவும் வேலைக்குப் போக எண்ணினார். பத்திரிகை ஒன்றில் காணப்பட்ட வேலை விளம்பரத்தை அப்பா அம்மாவிடம் கொடுத்திருந்தார். அன்று விண்ணப்பிப்பதற்கான இறுதி நாளாக இருந்தது.



அவசர அவசரமாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, கல்லூரிக்குப் புறப்பட்ட மாலதியிடம் கொடுத்து, தபால்பெட்டியில் போட்டு விடும்படி அம்மா சொல்லியிருந்தாள். கல்லூரி முடிந்து வீட்டுக்குத் திரும்பியதும், அம்மா "விண்ணப்பப் படிவம் சேர்த்து விட்டாயல்லவா?" என்று ஆவலுடன் கேட்டாள். அப்போதுதான் மாலதிக்கு நான் படிவத்தைத் தபாலில் சேர்ப்பிக்காதது ஞாபகம்

வந்தது. "ஓ, போட்டு விட்டேனே!" என்று கூறிவிட்டு தன் அறைக்குள் சென்று விட்டாள்.

அம்மாவிடம் பொய் சொல்லியது மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது. குப்பைவாளிக்குள் விண்ணப்பப்படிவத்தைப் போட்டு விடுவோம் என்று எண்ணினாலும், அவளுக்கு மனத்துணிவு ஏற்படவில்லை. அடுத்தநாள் கல்லூரிக்குச் செல்லும்போது மாலதிக்கு "அழுகைஅழுகையாக" வந்தது. அழுது கொண்டே சென்று கொண்டிருந்த அவளை அப்பாவின் நண்பரான சுந்தரமாமாவின் குரல் தடுத்து நிறுத்தியது. அழுது கொண்டே விஷயத்தைச் சுந்தரமாமாவிடம் மாலதி கூறினாள்.

சுந்தரமாமா அவளைச் சமாதானப் படுத்தினார். "மாலதி, எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டாய்!. செய்த தவறை மறைக்கப் பொய் வேறு. நீ செய்தது தவறு என்றறிந்தபோது நீயே வேதனைப்பட்டு அழுகின்றாய்! சின்னவயதில் பொறுப்பாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் தெரிந்ததா? என்று கூறியவர், மாலதியிடம் "படிவத்தை என்னிடம் தா. நான் அந்த வழியாகத் தானே கந்தோருக்குப் போக வேண்டும். உரிய இடத்தில் நானே சேர்ப்பித்து விடுகின்றேன்" என்று அதைப் பெற்றுக் கொண்டார்.

சுந்தரமாமா விண்ணப்பப்படிவத்தை அதற்குரிய அலுவலகத்தில் சேர்ப்பித்து விட்டார். அம்மாவுக்கும் சில நாட்களுக்குப் பின் வேலை கிடைத்தது. மாலதி சுந்தரமாமாவிடம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

# அதிசய மோதிரம்



திடீரென்று வந்த புகை சற்று நேரத்தில் மறைந்தது. அது மறைந்ததும் மூவரைச் சுற்றியும் பல பெரிய சிலந்திகள். சித்திரா அவற்றைக் கண்டதும் பயத்தால் கத்தத் தொடங்கிவிட்டாள். கௌதம் பக்கத்தில் இருந்த தடியொன்றை எடுத்துச் சிலந்திகளை விரட்டினான். ரமாவும் அவனைப் போல செய்தாள். ஆனால் சிலந்திகள் போவதாகத் தெரியவில்லை.

சற்று நேரம் யோசித்த கௌதம் ரமாவிடம் அவளது அதிசய மோதிரத்தைப் பயன் படுத்தும்படி சொன்னான். அதன்படியே ரமாவும் மோதிரத்தை திருப்பியவாறு சிலந்திகள் போய்விட வேண்டும் என நினைத்துக்கொண்டாள். அடுத்த கணமே சிலந்திகள் மறைந்தன.

இதைத் தனது கண்ணாடியில் கண்ட முனிவர் மூவரையும் ஏதோ மந்திரம் சொல்லித் தனது குடிசைக்குள் வரவழைத்தார்.

திடீரென முனிவரின் வீட்டில் இருந்தது சிறார்களை வியக்க வைத்தது.

"சிறுவர்களே! நீங்கள் சாப்பிட எண்ணிய பழம் கொடிய விஷமுள்ளது. அதைச் ஒருவகை சிலந்தி இனம் மட்டுமே சாப்பிடும். அவை மனிதர்களுக்கு ஒன்றும் செய்யாது கண்ணுக்குத் தென்படாது அரிது. ஆனால் மனிதர்கள் பழங்களைச் சாப்பிட விரும்பினால் எல்லாச் சிலந்திகளும் கூட்டமாகக் கூடி சாப்பிட நினைத்தவர்களைத் தாக்கும். நீங்கள் போகும் போது நான் இதைச் சொல்ல மறந்து


விட்டேன்" என்றார் முனிவர். பின்பு "இப்போது இருட்டிவிட்டது. ஆகவே இன்றிரவு இங்கே படுங்கள், நாளை காலையில் நிலாவைத் தேடிப் புறப்படலாம்" என்றார்.

சிறுவர்களும் அன்று இரவு அங்கேயே படுத்தார்கள்.

அடுத்த நாள் காலையில் மூவரும் நிலா இருக்கும் இடத்தைத் தேடித் திரும்பவும் புறப்பட்டார்கள்.
(தொடரும்)

## சைவப்பூனை

வீட்டில் பெரியவர் சாப்பிட அமர்ந்திருந்தார். அவர் சாப்பிடும் தட்டுக்குப் பக்கத்தில் சின்னத்தட்டு ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. "எங்கே என் பிள்ளையைக் காணவில்லை" என்றவாறே அங்கும் இங்கும் தேடினார் பெரியவர். தட்டில் உணவைப் படைத்தவாறே பெரியவரின் மனைவி "தெருவில் பிள்ளைகளுடன் விளையாடப் போயிருக்கும். இல்லாவிட்டால் பக்கத்து வீட்டுக்குச் சென்றிருக்கும். நீங்கள் சாப்பிடுங்கள்" என்றார். "பிள்ளை வரும்வரை பார்ப்போம்" என்று சொல்லி விட்டுப் பெரியவர் எழுந்து விட்டார்.



மதிப்புக்குரிய அந்தப் பிள்ளையை அவருடைய குழந்தைகள் தேடித்

தூக்கிக் கொண்டு வந்தனர். மதிப்புக்குரிய அந்தப் பிரதிநிதி ஒரு பூனைதான். சிறிய தட்டில் வைத்த உணவு பூனைக்குத்தான். அந்தக் காட்சி அந்த வீட்டில் வழமையாக நடப்பதுதான். மாமிசமே உண்ணாத சைவப்பூனை அது. அவரது செல்லப்பிள்ளை அது. பெரியவர் யாரென்று உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். குழந்தை உள்ளம் கொண்ட அவர் காலம் சென்ற தணிகை உலகநாதன் அவர்கள் தான்.

எந்தநாளும் அவர் வீட்டில் ஓரே குழந்தைகள் கும்மாளம் தான். அயல் வீட்டுக் குழந்தைகள் எல்லாம் ஒன்று சேரும் இடத்தில் குழந்தைகளோடு குழந்தையாக தணிகையாரும், அவரின் செல்லப்பிள்ளையும் விளையாடுவார்கள். ஒருநாள் பூனை இறந்து விட்டது. பூனைக்கு ஒரு இரங்கல் கூட்டமே அந்த வீட்டில் நடத்தி விட்டார் பெரியவர்.

அவர் வீட்டின் பெயர் "குருவிக்கூடு". பேருக்கேற்றபடியே எந்த நேரமும் குருவிகள் ஏராளமாக வரும். மனிதர்களைக் கண்டு அவை பயம் கொள்ளுவதில்லை. கூடு கட்டி ஆனந்தமாக வாழும். சிறுவர் சங்கம் ஒன்று அங்கு இயங்கி வந்தது. தானே எழுதிய கவிதை, நாடகம் போன்றவைகளை குழந்தைகளைக் கொண்டு நடிக்கச் செய்தார். இவரது சிறுவர் இலக்கியத் தொண்டுக்காக "கோவை குழந்தை எழுத்தாளர் சங்கம்" இவருக்குக் கேடயம் அளித்துக் கௌரவித்தது.

அனுப்பியவர்:யாமினி அருள்வாசன்.

# இதோ நொடிகள்!

1. காட்டிலே பிறந்த மூங்கில் துண்டு கானமழையைப் பொழியுது.

2.கவிழ்த்த சட்டி மேல் குட்டிச் சட்டி.

3. நாம் சொல்வதைக் கேட்டுக் கொள்வான். எப்போது கேட்டாலும் திருப்பிச் சொல்வான்.

4. அண்ணன் தம்பி ஐவர். மூத்தவர் இல்லாவிட்டால் நால்வருக்கும் வேலையில்லை.

5. ஊருக்கு நடுவே உயர்ந்து நிற்கும், உருவம் பலபல சுமந்து நிற்கும், உச்சியில் கலசம் தரித்து நிற்கும்.

-கிரிசாந் மனோரஞ்சிதராசா-

விடை:

*1. புல்லாங்குழல், 2. கொண்டை. 3. ரேப்றக்கோடர். 4. விரல்கள், 5. கோபுரம*

# மகாபாரதம்

சந்தனு மன்னன் தன் மகனோடு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தான். மகனான காங்கேயனும் பதினாறு வயதுள்ள கட்டிளங்காளையானான். ஒருநாள் அரசை மகனிடம் ஒப்படைத்து விட்டு, காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அங்கு சத்தியவதி என்னும் அழகிய ஓடக்காரப் பெண்ணைச் சந்தித்தான். அவளைத் திருமணம் செய்து கொள்ளவும் விரும்பினான். தன் விருப்பத்தைத் தேர்ப்பாகன் மூலமாக அவள் தந்தையிடம் தெரியப்படுத்தினான்.

அப்போது சத்தியவதியின் தந்தையான ஓடக்காரன் "அரசருக்கு முன்பே ஒரு மகன் இருக்கிறான். அவன் இருக்கும்போது என்மகள் பெற்றுக் கொள்ளும் பிள்ளை நாட்டை ஆள முடியாது. ஆனபடியால் என்மகளை அரசனுக்குத் திருமணம் செய்து தர நான் விரும்பவில்லை" என்று மறுத்து விட்டான். இதனால் வேதனைப்பட்ட மன்னன் நாடு திரும்பினான். தந்தையின் வேதனையை அறிந்த காங்கேயன் தேர்ப்பாகனையும் அழைத்துக் கொண்டு சத்தியவதியின் தந்தையிடம் சென்றான்.

அவரிடம் தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும்படி வேண்டினான். சந்தனு மன்னனுக்குக் கூறிய அதே வார்த்தைகளை மீண்டும் ஓடக்காரர் தலைவன் கூறினான். தன் தந்தையின் வேதனைகளைக் குறைப்பது தன் கடமை என்று நினைத்த காங்கேயன்,



ஓடக்காரரைப் பார்த்து, நீங்கள் என் சிறியதாயாரின் தந்தையானபடியால் எனக்குப் பாட்டனாக வேண்டும். எனக்கு தந்தையின் அரசு தேவையில்லை. நான் வாழ்வில் திருமணம் செய்யாமல் பிரமச்சாரியாகவே வாழ்வேன் என்றும் சத்தியம் செய்தான்.

அப்போது அங்கே இருந்த பெரியவர்கள் அவனை வீஷ்மன் (தேவவிரதன்) என்று போற்றினார்கள். பின் சத்தியவதியையும் அழைத்துக் கொண்டு நாடு திருப்பினான். சந்தனு மன்னனான தந்தையைப் பணிந்து, தந்தையே, சின்னம்மாவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினான். மகன் செய்த சத்தியங்களை அறிந்த மன்னன் பெரும் கவலை கொண்டான். பின் தன் மகனைப் பார்த்து தந்தைக்காக நீ செய்த கடமைகளை வேறு யாரும் செய்ய மாட்டார்கள். ஆதலால் என் மகனே, நீ எப்போது சொர்க்கம் செல்ல எண்ணுகிறாயோ, அப்போதுதான் இறப்பு உன்னைத் தேடி வரும் என்று கூறி வீஷ்மனைத் அன்புடன் தழுவிக் கொண்டான்.

இதன் பின் வீஷ்மனுக்குச் சித்திராங்கதன், விசித்திரவீரியன் என இரண்டு தம்பியர் பிறந்தனர். அவர்களில் சித்திராங்கதன் அஸ்த்தனாபுரத்தை ஆட்சி செய்தான். அவனது ஆட்சியில் நடந்த போரில் அவன் இறந்து விடவே, விசித்திரவீரியன் வீஷ்மரின் சொற்படி அரசனானான். அவன் காசி தேசத்து அரசனின் புதல்விகளான அம்பிகை, அம்பாலிகை ஆகிய இருவரையும் திருமணம் செய்து கொண்டான்.

- தொடரும் -

**வேதங்கள்:**

ஆரியர்கள் காலத்தில் வேதங்கள் தோன்றின. இவை ஆரியரின் வாழ்க்கை வரலாற்றை அறிய உதவுகின்றன. வேதங்கள் மனிதனால் உண்டாக்கப் படவில்லை என்றும், இறைவன் அருளால் ரிஷிகள் வழியாகத் தோன்றின என்பர். வேதங்கள் ரிக் வேதம், யசுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என நான்கு ஆகும். உலகின் பழைமையான நூல் ரிக் வேதம்.

**புராணங்கள்:**

ஆரியர்களின் மதம், இலக்கியங்களைப் பற்றிக் கூறும் நூலாகும். புராணங்கள் மொத்தம் 18 ஆகும். இப்புராணங்களில் கதைகள், பரம்பரைகள், ஒழுக்கம், மதச் சடங்குகள் போன்றவை அடங்கியிருக்கின்றன. விஷ்ணு புராணம், வாயு புராணம், பாகவத புராணம் போன்றவை மிகச் சிறந்த புராணங்களாகும்.

**இதிகாசங்கள்:**

இதிகாசங்கள் இரண்டு. இராமாயணம், மகாபாரதம். இராமாயணத்தை வடமொழியில் எழுதியவர் வால்மீகி. இதைக் கம்பர் தமிழில் ஆக்கினார். மகாபாரதம் வியாசரால் இயற்றப்பட்டது. உலகில் உள்ள சிறந்த நூல்களில் மகாபாரதமும் ஒன்றாகக் கருதப் படுகின்றது. பல அறிவுரைகளைக் கொண்ட "பகவத்கீதை" மகாபாரதத்தில் ஒரு பகுதியாகும்.


-முகுந்தன் மகேந்திரன்

# தேசப்படம்

மாணவர்களாகிய நீங்கள் தேசங்களைப் பற்றி அறிந்திருக்கிறீர்கள். ஒரு தேசத்தின் அமைப்பு, நதிகள், மலைகள் போன்றவை எப்படி இருக்கும் என்பதைக் கூட தேசப்படப் புத்தகத்தில் (Atles) இருந்து கண்டு பிடித்து விடுவீர்கள். தேச வரைபடத்தை முதலில் கண்டு பிடித்தவர்கள் எகிப்தியர்கள் தான்.

கிட்டத்தட்ட 4000 ஆண்டுகளுக்கு முன் மன்னர்கள் தங்கள் நாட்டு எல்லைகளை வரையறுக்கவும், தங்கள் பிரதேசங்களை அளவெடுக்கவும் வரைபடத்தைப் பயன்படுத்தினார்கள். காகிதம் கண்டு பிடிக்காத காலம் அது. களிமண்ணில் எழுதி, அதை நெருப்பில் சுட்டு உறுதியாக்கிப் பயன்படுத்தினார்கள்.

பூமியின் நிலப்பரப்பு, தோற்ற அமைப்பு பற்றி அக்காலத்தில் மக்களுக்கு சரியாகத் தெரியாததால் தொலைவில் உள்ள இடங்களைக் குறிப்பிட முடியாமல் கஷ்டப் பட்டார்கள். கி.மு 176ம் ஆண்டு "எரோடாதனிஸ்" என்னும் கிரேக்க நாட்டு அறிஞர் பூமியின் சுற்றளவை அறிந்தார். "கிப்பர் சஸ்" என்பவர்



அட்சரேகை, தீர்க்கரேகை ஆகிய கற்பனைக் கோடுகளை வரைந்து காட்டினார். இதன் பின் தொலமி இக்கோடுகளைத் துணையாகக் கொண்டு தேசங்களின் தூரத்தைக் கணக்கிட்டார்.

மெகலன், கொலம்பஸ் போன்ற மாலுமிகள் புதிய புதிய இடங்களைக் கண்டு பிடித்தபோது தேசப்படங்கள் முக்கியத்துவம் பெற்றன. பூமி உருண்டையின் மேல் போடப்பட்ட வரைகோடுகளை நேர்கோடுகளாக வரைந்து, தற்காலத்து தேசப்படத்தை உருவாக்கியவர் "ஜெராடஸ் மெர்க்காடர்" என்பவராவர். தேசப்படப் புத்தகத்தின் அட்டையில் "அட்லஸ்" என்ற அரக்கனின் படத்தை வரைந்தார். இப்பெயர் இப்பொழுது தேசப்படத் தொகுப்புக்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாக வழங்கப்படுகின்றது.

# ஒன்றாய்த் தந்தான்



இரண்டு கால்கள் எதற்காக?
என்றும் விரைவாய் நடப்பதற்கு!
இரண்டு கைகள் எதற்காக?
என்றும் வேலை செய்வதற்கு!

ஏனோ நாக்கை வாயுள் மட்டும்
இரண்டாய் இறைவன் வைக்காமல்
ஏனோ ஒன்றாய்த் தந்தானோ!
இதன் பொருள் என்ன அறிவாயா?

இரண்டு விதமாய்ப் பேசாமல்
என்றும் உண்மை பேசிடத்தான்
இரண்டாய் அவற்றைப் படைக்காமல்
இறைவன் ஒன்றாய்த் தந்துள்ளான்.

-செல்வகணபதி-

உ

எகிப்திய அரசி கிளியோபட்ரா தினமும் கழுதைப் பாலில் குளித்ததாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இது உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் பிரஞ்சு மன்னனான 14ம் லூயி, பாலாடையும் வையினும் கலந்த நீரில் குளித்ததாக வரலாறு உண்டு.

# இராமாயணம் பிறந்த கதை

மக்களை நல்வழிப்படுத்துவதற்கு வந்தவைகளே இதிகாசங்கள் ஆகும். அவை இராமாயணம், மகாபாரதம் என்பனவாகும். இரண்டுமே சகோதரர்கள் எப்படி இருக்க வேண்டும். ஒரு மனிதன் எப்படி வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றன. மகாபாரதம் சகோதரர்களிடையே உண்டான பகையினையும், இராமாயணம் சகோதர பாசத்தின் சிறப்பையும் கூறுகின்றது.

இந்த இராமாயணத்தை எழுதியவர் வால்மீகி என்னும் முனிவர். அவர் அன்பும் கருணையும் நிறைந்தவர். அவர் காட்டில் வாழ்ந்து வந்தார். ஒருநாள் நாரதர் அவரிடம் வந்தார். நாரதரிடம் வால்மீகி "நீங்கள் எல்லாவிடமும் சென்று வருபவர். இந்த உலகத்தில் கருணை, உண்மை, நேர்மை போன்ற குணங்கள் பொருந்திய யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டார். அதற்கு நாரதர் "நான் அறிந்தவரையில் அயோத்தி அரசனான இராமரே எல்லாவகைக் குணங்களும் பொருந்தியவர்" என்று சொன்னார்.

பின் நாரதரே இராமனின் வரலாற்றை வால்மீகிக்குக் கூறினார். இராமனின் உயர்ந்த குணங்களைச் சிந்தித்தவாறு நதிக்கரையில்

உலாவிக் கொண்டிருந்தார் வால்மீகி. அருகில் இருந்த மரத்தில் ஆணும் பெண்ணுமாக இரண்டு பறவைகள் ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்தன. அவைகளின் ஆனந்த கீதத்தைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார். அந்தோ! பரிதாபம். எங்கிருந்தோ வந்த அம்பொன்று பெண்பறவையின் உடலைத் துளைத்துச் சென்றது.

கீழே விழுந்து துடித்த பறவையைக் கண்ட ஆண்பறவையின் அவலக்குரல் காடு முழுவதும் எதிரொலித்தது. முனிவரின் மனமும் மிகுந்த துன்பத்தில் ஆழ்ந்தது. அதேவேளையில் அம்பு எய்த வேடன் அங்கு வந்தான். "இன்பமாகப் பாடிக் கொண்டிருந்த பறவைகளைப் பிரித்து விட்டாயே! உனக்கு இதயம் என்பதே இல்லையா?" என்று வேதனையுடன் கேட்டார் வால்மீகி. அவரையும் அறியாமல் பாடலாக அந்த வினாக்கள் வெளிவந்தன.

அவரது பாடலில் மயங்கி, படைக்கும் தெய்வமான பிரம்மா வால்மீகி முன் தோன்றினார். வால்மீகியிடம், "முனிவரே! நீங்கள் பாடிய கவிதை மிகவும் நயமாகவும், இனிமையாகவும் இருக்கின்றது. இதே இசைச்சந்தத்தில் இராமகாவியம் முழுவதையும் நீங்கள் பாடவேண்டும். உலகம் உள்ளளவும் அது நிலைத்து நிற்கும்" என்று கூறினார். மகிழ்ச்சியுடன் வால்மீகியும் இராமாயணத்தை வடமொழியான

சமஸ்கிருதத்தில் பாடினார். இதுவே இராமாயணம் பிறந்த கதையாகும். இதைக் கம்பர் தமிழ்மொழியில் பாடினார்.

(இது இராமகிருஷ்ணரின் சிறுவர் நீதிக்கதைகள் என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது.)

-மகிழினி பரமசிவம்-

**நல்ல பண்புகளை உருவாக்குகின்ற, மனவலிமையை வளர்க்கின்ற, அறிவை வளம் பெறச் செய்கின்ற, தன்னம்பிக்கையை ஊட்டுகின்ற கல்வியே நமக்குத் தேவை.**

**-விவேகானந்தர்-**

**கடவுள் மாறாதவர். அவரைப்பற்றி மக்கள் தெரிந்து கொண்டிருக்கும் எண்ணங்களே மாறிக் கொண்டிருக்கின்றன.**

**-மகாத்மாகாந்தி-**

**கடவுள் இல்லை என்று சொல்பவர்களைப் பார்த்திருக்கின்றோம். உண்மை இல்லை என்று சொல்பவர்களைப் பார்த்ததில்லை.**

**-மகாத்மாகாந்தி-**

# ஒளி ஏற்று



அன்பு ஒன்றே உனது மதம்
அழகுச் செல்வமே வா! வா! வா!

ஆயிரம் மதங்கள் ஏன்? ஏன்? ஏன்?
அறிந்து கொள்ள நீ வா! வா!வா!

மதத்தால் பிரிவு வீண்! வீண்! வீண்!
மனதில் ஒற்றுமை தேன்! தேன்! தேன்!

இறைவன் ஒருவனே ஆம்! ஆம்! ஆம்!
என்றும் ஒருவரே நாம்! நாம்! நாம்!

இருட்டைத் தாண்டி நீ வா! வா! வா!
எங்கும் ஒளி வெள்ளம் பார்! பார்! பார்!


~மதிஒளி~

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மா | வி | த் | தி | யா | ச | ம் | ம | தி | வி |
| ம் | த | ர | ப | ட் | டி | ய | ஷ் | சு | ப |
| த | ட் | ச | ணை | தி | ரி | வி | டி | ய | ல் |
| சா | ட் | டை | த | பு | தை | ய | ஷ் | ச | ல |
| வி | த | ந | ம் | மை | த் | ப் | வு | றி | கி |
| த் | பு | வ் | ய | யி | வி | பு | லை | தை | ஞ் |
| தி | ம் | கா | வ | ல | ன் | ஆ | ம | வ | ஞா |
| ரி | சு | ப | ள் | ளி | சி | சா | ற | ப | ண |
| ப | சு | சை | ள | ங் | ரா | க் | வ | ர | ம் |
| க | ம | பு | ம் | சே | வி | ட | ன் | ன | ன் |

பூமலர் திகதி: 5. 10. 90

# மகிழ்ச்சி




அம்மா கேசவனைக் கூப்பிட்டு மா வாங்கி வரும்படி கடைக்கு அனுப்பினாள். கடையில் சனமாக இருந்தது. கேசவன் வரிசையில் நின்றான். மாவை நிறுத்துப் பைக்குள் போட்டுவிட்டுக் கடைக்காரர் கேசவனிடம் பணம் பெற்றுக் கொண்டார். கேசவன் வீட்டுக்கு வந்து மாவை அம்மாவிடம் கொடுத்தான். அதற்குள் இருந்து பத்து ரூபாய் நோட்டு விழுந்தது.

அம்மா கேசவனைக் கூப்பிட்டாள். "யாராவது பாவம்! பணத்தைத் தொலைத்திருப்பார்கள். காசைக் கொண்டு போய்க் கடைக்காரரிடம் கொடுத்து விடு" என்றாள். கேசவன் கடைக்குச் சென்றான். அங்கு பெரியவர் ஒருவர் பணத்தைத் தேடிக் கொண்டிருந்தார். கேசவன் கடைக்காரரிடம் பணத்தைக் கொடுத்தான். கடைக்காரர் பெரியவரிடம் கொடுத்தார். பெரியவர் கேசவனைப் பாராட்டினார். கேசவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒரு வாளியில் தண்ணீர் நிரப்பிக் கொள்ளுங்கள். சில அப்பிள்களையும், கரட்டுக்களையும் தண்ணீருக்குள் போடுங்கள். கரட் தண்ணீருக்கு அடியில் போய் விடும். அப்பிள்கள் நீரில் மிதக்கும். ஒவ்வொரு காய், கனிகளிலும் காற்று இருக்கிறது. அந்தப் பொருளின் அளவு, கெட்டித்தன்மை ஆகிய வேறுபாட்டினால் சில பொருட்கள் தண்ணீரில் மிதக்கின்றன. சில தண்ணீரில் மூழ்கி விடுகின்றன. அப்பிள்கள் தண்ணீரில் மிதப்பதற்கும், கரட்டுக்கள் தண்ணீரில் மூழ்குவதற்கும் காற்றின் அமுக்க அளவின் வேறுபாடுகளே காரணமாகின்றது.




**NEKTAR FÜR KINDER**